JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்

சிவமயம்

பிரதி விலை: சதம் 10.

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 23உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[புத்-எகூ] யாழ்ப்பாணம் பிலவங்க ஞு ஆடி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (28 7—1967) [இல-கஉ]

## சிதம்பர தலத் திருப்பணிக்கு
## பிறந்தநாள் வழிபாட்டுப் பேரறத் திட்டம்

———0———

["இந்துசாதனம்" அபிமான திரு. திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

பூமியில் கோயில்கள் பல இருப்பினும், சைவத் திருமுறைகளில் "கோயில்" என்று சிறப்பித்துப் போற்றப்படுவது சிதம்பர தலமாகும்.

இக்கோயிலில் பல திருப்பணிகள் மிகமிக இன்றியமையாததாக இருக்கின்றன. கோயிலின் பாதுகாப்பாக இருந்துவரும் சுற்றுமதில் சுவர்கள் பெரிதும் சிதைவுற்றுள்ளது, கோபுரங்கள் பழுது பார்த்துப் புதுப்பிக்கவேண்டும். யாத்திரீகர்களுக்குச் சத்திரம் தண்ணீர் சுகாதார வசதிகளும் செய்வதற்குத் திருப்பணிக் குழுவினர்கள் புது திட்டங்கள் வகுத்துச் செயலாற்ற முன்வந்துள்ளார்கள்.

6400 அடி நீளமுள்ள சுற்றுமதிலில் சுமார் 2000 அடி நீளமதான் நன்றாகவுள்ளது. மீகுதியாகவுள்ள சுவர்கள் புதுப்பித்தாக வேண்டும். திருப்பணிக் குழுவினர் இதுவரையில் 250 அடி நீளமே ரூபாய் 80 ஆயிரம் செலவில் புதுப்பித்துள்ளனர். திருப்பணி வேலையைத் துரிதமாக நடைபெறப்பொருள் வசதி தேடப்படுகின்றது.

திருப்பணிக் குழுவினர் கோயில் திருப்பணிகளைத் துரிதமாக நடாத்துவதற்கு "பிறந்தநாள் வழிபாட்டுப் பேரறத் திட்டம்" என்பதனை வகுத்துள்ளனர் திட்டத்தின் விபரங்கள் பின்வருமாறு:—ஆண்டொன்றுக்கு ரூபாய் 125 வழங்குபவர் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் திருப்பணிக் குழுவில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுடைய பிறந்த நாளன்று [ஜென்ம நட்சத்திரத்தில] அவர்களின் பெயரால் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சகஸ்ர நாம அர்ச்சனையும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாளுக்கு அஷ்டோத்திர அர்ச்சனையும் செய்து விபூதிப் பிரசாதம் நடராசர் திருவுருவக்காசு முதலியன அவர்களுக்கு அனுப்பப்படும். இதற்கென தீட்சிதர் கட்டணம் முதலியன உள்பட

### அலங்கார உற்சவம்

—O—

செல்வச்சந்நிதி முருகப் பெருமானின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆகஸ்ட் மாதம் 6-ந் திகதி துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகும். 19-ந் உ இரதோற்சவமும் 20-ந் உ தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ரூபாய் 25 ஒதுக்கப்படும். எஞ்சியதொகை ரூபா 100 ம் ஸ்ரீ நடராசர் ஆலயத் திருப்பணி நிதியில் சேர்த்துக் கொண்டு திருப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். ஆகவே இத்திட்டத்தால் ஒருவர் பிறந்தநாளில இறைவனை அர்ச்சனை செய்து வழிபடுகின்ற புண்ணியத்தையும ஆலயத்திருப்பணியில கலந்து பங்குபெற்றுள்ள புண்ணியத்தையும் ஒருசேர எளிதாகப் பெற வாய்ப்பு உண்டாகிறது.

ஆகவே திருப்பணிக்கு உதவும் நோக்கத்துடன் பலலாயிரக் கணக்கான மக்கள் இத் திட்டத்தில பங்கு கொண்டு இறைவனின் திருவருளைப் பெறுதல வேண்டும்.

ஷை நிதியை ஆண்டுதோறும் செலுத்துவதற்குப் பதிலாக ஒரே தவணையில மொத்தமாகவும செலுத்தலாம். அல்லது ஆண்டொன்றுக்கு ரூபாய் 125 வட்டி மூலம் கிடைக்கக கூடிய வகையில் ஒரு மூலதனமாக ரூபாய் 2100 ஆகவும வழங்கலாம.

நாள் ஒன்றுக்கு ரூபாய் 1000-க்கு குறையாமல மாவபெரும் ஆலயத திருப்பணி நடைபெற வேண்டும ஆகவே ஒருநாள் திருப்பணிக்கு குறைந்தது 10 பேராவது திட்டத்தில் பங்கு கொள்ளல் வேண்டும் திருப்பணி பல ஆண்டுகள் தொடர்ந்து பெரிய அளவில் நடைபெறவேண்டியிருப்பதால லட்சக்கணக்கானவர்கள் இத் திட்டத்தில பங்குபெறல் வேண்டும். நன்கொடைக்கு அரசியல் வருமான வரியிலிருந்து விலக்கும் அளித்துள்ளார்கள்.

எந் நாட்டில் இருப்பினும் பிறந்தநாள் வழிபாட்டில் தில்லை ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள்சமேத ஸ்ரீமந் நடராஜப்பெருமானின அருள் பிரசாதம் வீடுதேடிவரக்கூடிய பெருமைவாய்ந்த திட்டமாகும் ஆகவே சைவசமயப் பெருமக்கள் இத்திட்டத்தில் பங்குகொள்ளல் வேண்டும்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி
"பொருள் காப்பாளர்"
தில்லை ஸ்ரீ நடராஜப்பெருங் கோயில் திருப்பணி
பிறந்தநாள் வழிபாட்டுத் திட்டம்
சிதம்பரம்
தென்னிந்தியா

—⊕—

உ
சிவமயம்

பரவுவார் இமையோர்கள்
பாவேன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள்
கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின்
அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள்
காண்பாரோ அறியாளே.

—மாணிக்கவாசக சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும், தீதேயாயினும், அதுவே பெரும் பான்மையும் மரணபரியந்தம் அவனைத்தொடரும்.

### சப்த தீவக திவ்வியஜீவனசங்க அங்குராப்பணம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, காரைநகர், புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய ஏழு தீவுகளிலும் நிறுவப்பெற்றுள்ள திவ்விய ஜீவன சங்கப் பிரமுகர்கள் அணைமையில் நயினையில் ஒன்று கூடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய முன்றலில் சப்த தீவக திவ்விய ஜீவன சங்க சமாஜத்தை நிறுவியுள்ளார்கள். கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கச் செயலாளரும் வழக்கறிஞருமான திரு S கனகரெத்தினம் J. P. தலைமை வகித்தார்.

சப்ததீவக திவ்விய ஜீவனசங்க சமாஜத்தலைவராக திரு. S. விசாகப்பெருமானும், காரியதரிசியாக திரு. ம. நமசிவாயமும், தனதிகாரியாக திரு நா. கோபாலகிருஷ்ணனும் தெரிவு செய்யப்பெற்றனர்.

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு நயினாதீவி லிருந்து சப்த தீவகங்களிலுமுள்ள அன்பர்களது ஆதரவுடன் ஒரு பிரமாண்டமான பஜனை ஊர்வலத்தை 1-9-67, 2-9-67 வெள்ளி, சனிக்கிழமைகளில் நடாத்துவதெனவும், இதற்கு இலங்கை இந்திய பகதிப் பாடகர்களையும், சமயப் பிரமுகர்களையும்அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பெற்றது.

## அருட் செல்வம் (II)

[அருட்கவி சீ விநாசித்தம்பி அவர்கள்]

"என்ன ஐயா சுற்றுப்பிரயாணத்துக்காகக் கொழும்புக்குப் போனீர்; ஒரேயடியாய் அங்கே குடியேறிவிட்டீராம் மெய்தானோ?" என்று ஒருவர் தன் நண்பனைக் கேட்கிறார்—"வாஸ்தவம்தான், அங்கே எனக்கு நல்ல வசதி—ஒன்றும் குறைவில்லை. சுகத்தை அனுபவிக்கில் அங்கே அல்லவா இருக்கவேண்டும்" என்கிறார் நண்பர். சுகத்தைக் கண்டால் யார்தான்விடுவார்கள் — இப்படியாக விளங்குகிறார்கள் சுகம் கண்ட அடியார்கள். எங்கே? திருப்புள்ளிருக்கு வேளூரிலே--

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

—என்று சம்பந்தர் பாடுகிறார். அங்கே கீதத்தை மிகப்பாடும அடியார்கள் சுகம்கண்டார்களாம் இறைவன் பாதத்தில் குடிகொண்டுவிட்டார்கள். இனி வேதமந்திரத்தால் பூசிக்கப்படும் கல்லுக்கும் சாதாரண கல்லுக்கும் பூசிககப்படும மண், மரம், லோகம், முதலியவற்றுக்கும் மற்றைய மண், மரம் லோகம், என்பவற்றுக்கும் என்ன வித்தியாசம் என்று சம்பந்தப்பெருமான் எடுத்துரைக்கிறார். சம்பாதி என்ற கழுகு, வெண்மணற் குவியலைச் சிவமாகப் பாவித்து [illegible] தால் பூசித்தவுடனே, பெருமான் அங்கே நின்றுவிட்டாராம். பெருமான் "பேசுவதும் திருவாயால் மறை" அல்லவா? அவர் பேசிய மறையை அன்பர் பேசினால், அந்த இடத்திலே அவர் நின்றுவிடுவார்—வெண்மணலை, அன்போடு மந்திரம் சொல்லிப் பூசித்தாராம் சம்பாதி. சம்பாதியின் மந்திரத்துக்காக வெண்மணலிலே நின்ற பரஞ்சோதியாகிய சிவன். அங்கே கீதம் பாடும் அடியார்கள், தம் சுகங்கருதி, தனதடியையே தமது குடியாகக் கொள்வதினாலே அவ்விடத்திலே தானும் ஸ்திரமாகப் பயிலுகிறாராம்:—

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள், குடியாகப்
பாதத்தைத் தொழ, நின்ற பரஞ்சோதி
பயிலுமிடம்
... ... .... ... ... ... ... ... ... ... ...
... ... ... .... .... ... புள்ளிருக்கு வேளூரே".

ஆகையினாலே கல், மணல், லோகம், மரம், எதுவானாலுமசரி வேத மந்திரத்தால் பூசித்து நாம் பக்தியுடனே பாடினால், அங்கே ஆண்டவன் நின்று, பயின்று, தமதடியின்கீழ் எம்மைக் குடியிருத்தி வைப்பான் என்பது புலனாகிறது. (வளரும்)

### திருக்கேதீஸ்வரத்தில் சிரமதானம்

திருக்கேதீஸ்வரம் பாலாவி ஆற்றுத் தீர்த்தக் கரையை மேலும் புனிதப்படுத்தும் நோக்காக இம்மாதம் 28-ம் 29-ஆந் திகதிகளுக்கு சிரமதான இயக்கம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

——

### பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

நீர்வேலி அத்தியர் இந்துக்கல்லூரியின் மேற்கூட்டம் 14-7-67-ல் அதிபர் பிரம்மஸ்ரீ சி. ஸ்ரீநிவாசன் தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவின்போது திரு சி. கதிரவேற்பிள்ளை அ. கணபதிப்பிள்ளை ஆகியோர் போஷகர்களாகவும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## எங்கள் அறிவித்தல்

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தேர், தீர்த்தம் திருவிழாக்களை முன்னிட்டு ஆடி 19-ஆம், 20-ஆம் தேதி (4, 5-8-67) வெள்ளி, சனி இருதினங்களும் எமது காரியாலயத்தில் கருமமாற்றுவோர்க்கு விடுமுறையாதலால் இத்தினங்களில் இங்கு எவ்விதகருமமும் நிகழாதென்பதை அன்பர்கட்குத் தெரிவிக்கிறோம்.

—அதிபர்


# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஞு ஆடி ௴ ௧௨ - ௨ வெள்ளிக்கிழமை [1967]


# மாணவரொழுக்கம்

கலாநிதி மலலசேகரா அவர்கள் இக்காலத்தில் இலங்கையிலுள்ள தலைசிறந்த கல்வி நிபுணர்களுள் ஒருவர். இலங்கைத் தேசிய உயர்தரக் கல்விச் சபையின் தலைவர். பலநாடுகளிலுமுள்ள கல்வித்தாபனங்களையும் கல்வி முறைகளையும் அவதானஞ் செய்த அநுபவமும் வாய்ந்தவர். முன்னைய நாட்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியராகவுங் கடமையாற்றியவர். அத்தகைய கல்வி நிபுணர் சில தினங்களுக்கு முன் கொழும்பு அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தினது பரிசளிப்பு விழாவில் தலைமையுரை நிகழ்த்தும்பொழுது அக்கால மாணவரொழுக்க முறைகளைப்பற்றிச் சிலசிறந்த கருத்துக்களை வெளியிட்டனர். மாணவர்களுடைய அமைதியின்மைக்கும் அவர்கள் கட்டுப்பாடுகளை மீறி ஒழுகுவதற்கும் முக்கிய காரணம் அவர்கள் வாழ்க்கையில் ஒரு விரக்தியையும் துன்பத்தையும் அநுபவிப்பதேயாகும். இவ்வித விரக்தி மனப்பான்மையே வீட்டிலும் சரி பிற இடங்களிலும் சரி மாணவர்களுடைய ஒழுக்கம் குன்றிவருவதற்குக் காரணமாகும். கல்வியின் நோக்கம் நாட்டில் சான்றாண்மையுள்ள ஆடவர்களையும் பெண்களையும் உருவாக்குவதேயாகும். அதற்கு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் அன்னியோன்னியமான அன்பு நிலவவேண்டும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மாணவர்கள் துட்டர்கள் அவர்களை அடக்கி ஆளவேண்டுமென ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். மாணவர்கள் ஆசிரியர்களைத் தங்கள்மீது கருணையில்லாமல் தங்களை அடக்கியாளும் கொடுமைக்காரர் எனக் கருதுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்குதல்கூடாதென மாணவர்கள் கருதுகின்றார்கள்.

பண்டைக்காலத்தில் எழுத்தறிவித்தவனை இறைவனாக மாணவர்கள் மதித்தார்கள். அக்காலத்தில் மாணவர்கள் கல்வியறிவைப் பெற்று நல்லவர்களாய் வரும் பொருட்டுக் கற்றார்கள். இக்காலத்தில் கற்பவர்கள் எல்லோரும் அரசாங்கத்தில் கதிரை உத்தியோகம் பெறும் நோக்கத்துடனேயே படிக்கின்றார்கள். அரசாங்கம் பரீட்சைகளில் சித்தியடைந்த எல்லோருக்கும் அவ்வித உத்தியோகத்தை வழங்கமுடியாது தவிக்கின்றது. இன்று ஓரிலட்சத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளும் பிற பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் உத்தியோகம் பெறமுடியாமல் தெருவழியே திரிகின்றார்கள். உத்தியோகம் பெற முடியாதிருக்கின்றவர்கள் பிறகருமங்களை யாற்றுவது வெட்கமென எண்ணுகின்றார்கள். தங்கள் தாய் தந்தையர் பார்த்துவந்த வேளாண்மை, தச்சுத்தொழில், கன்னாரத்தொழில், நெசவுத்தொழில் முதலியவற்றை இழிவாக மதிக்கின்றார்கள். ஓர் உத்தியோகமும் பார்க்க முடியாமலிருக்கின்ற இளைஞர்கள் சீவியத்துக்கு வழியில்லாமல் களவு கடன்படல் முதலிய தீய வழிகளால் பொருள்தேடத் தலைப்படுகின்றார்கள். இவ்விதமாக வாழுகின்ற மக்கள்தான் பெரும்பாலும் நாட்டில் துட்டர்களாகவும் பைத்தியக்காரராகவும் தோன்றுகின்றார்கள். வாழ்க்கையில் துன்ப மிகுதியால் தற்கொலை செய்கின்றார்கள். "போனகமென்பது தானுழந்துண்ணல்" ஒருவன் தன்னுடைய சொந்த முயற்சியினால் அடைகின்ற வருவாயைக் கொண்டே உணவு அருந்தல் வேண்டும். பிறருடைய தேட்டத்திலிருந்து உண்பது நஞ்சாகும். தொழிலில் இழிவு உயர்வு இல்லை தொழில் செய்வதே பெருமை. சோம்பலே ஒருவனுக்கு இழிவைக் கொண்டுவரும்.

> முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
> யின்மை புகுத்தி விடும்

முயற்சி ஒருவனுடைய செல்வத்தினை வளர்க்கும், முயற்சியில்லாமை வறுமையையடைவித்தலும்,

## திருமுறை இலக்கியச்சுவை

[புங்குடுதீவுச் சைவ கலாசங்கத்தினரால் நடாத்தப்பட்ட சைவமகாநாட்டில் நிகழ்ந்த சேக்கிழார் கவியரங்கில் பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள் படித்த பாக்கள்.]

(முற்றொடர்ச்சி — 3)

வேறு ["கண்களிரண்டும்'...........திருவாசக மெட்டு]

பண்களினோசை பயின்று பயின்று நம் பக்தியைப் பெருக்கும்மே
பாடல் வகைபல பாடிப்பயின்றிடப் பத்தர்கட் கருளுறும்
விண்ணுலகோர்பலர் மண்ணுலகெய்த விரும்பி இவண் வருவார்
வீரநலன்பினின் ஈரம்விளைந்தநல் விரதர்கள் காண்புறவார்
கண்ணுறுவோர்களின் கண்ணுங் கருத்துமே கசிந்து கசிந்துருகும்
காலைக் கதிரவன் மாலை மதியவன சோலை அழகுதோன்றும்
எண்ணும் பொழுதெளி தாய் வந்திடும் எந்தை பிரானருளால்
எங்கள் திருமுறை இலக்கிய இன்பத்தை இங்குநாம்
சொலலிடினே. (11)

"தோடுடை" 'கூற்று' 'பித்தா' 'சொற்றுணை' 'சோல்' 'காதல்', 'மற்றுப்பற்றுத்'
தோத்திர மாணவை தோத்திரித் தின்புறத் தோன்றும் பிரான் பெருமை
கடுநல் 'நமச்சிவ' 'நான்முகன்' 'மெய்தான்' அடைக்கலம் அச்சோக்கள்
நல்லொளி வளரிசை' 'மன்னுக தில்லை'யும் நாம்சொல அருளுறும்
பீடுடை 'உலகெலாம்' 'ஐந்துபேரறிவும்' 'தெண்ணிலாமலர்ந்தன' வுர்மூத்த
பிள்ளையார் மாலைகள் முருகாற்றுப்படையும் மொழிந்திட இடர்தீரும்
நாடுறு 'கோங்குதேர்' 'மதிமலிபுரிசை' நயமது நாம் நயந்தோம்
நங்களை ஆண்ட குள்நம்மிறைமுதலே! கற்றிருமுறை வாழ்க (12)

வேறு வாழ்த்து

வாழ்க திருமுறை! வாழ்க திருநீறு! வாழ்க கண்டிகையே!
வாழ்க திருவைந்தெழுத்தினை ஓதுவோர்! வாழ்க அந்தணரே!
வாழ்கநற் சைவர்கள்! வாழ்க சபையினர்! வாழ்க நல்லோரே!
வாழ்க கலாசங்கம்! வாழ்கஇம் மாநாடு!! வாழ்க பூவுலகே!!! (13)

## "உணவில் தன்னிறைவு காண உதவுங்கள்"

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் 7-7-67 வியாழக்கிழமை ஆரம்பமாய யாழ். மாவட்டக் கைத்தொழில் விவசாயப் பொருட் காட்சியைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய சுகாதார அமைச்சர் கௌரவ எம். டி. எச் ஜயவர்த்தனு அவர்கள் "இந் நாட்டின் கைத்தொழில் விவசாய முன்னேற்றத்துக்காக வட பகுதி மக்கள் செய்துவரும் அளப்பரிய சேவைக்குத் தேசிய அரசாங்கத்தின் பாராட்டையும் நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று கூறினர்.

அவர் மேலும் தொடர்கையில் "யாழ்ப்பாண விவசாயிகள் கடின உழைப்பாளிகள் திறமைசாலிகள் மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருள்களை உற்பத்திசெய்வதில் வடபகுதி முன்னணியில் நிற்கின்றது. ஈரவெங்காயத்துக்கு இந்நாட்டு மக்கள் வடபகுதி விவசாயிகளை எதிர்பார்த்திருக்கின்றனர்".

தற்பொழுது உருளைக்கிழங்கு பம்பாய வெங்காயம் என்பனவற்றையும் பெருமளவில் பயிரிடுகின்றனர். வடபகுதி விவசாயிகள் வெளிநாட்டுச் செலவாணியை அரசாங்கம் சேமிப்பதற்குப் பெரும் உதவியாக இருக்கின்றனர். இவர்கள் அரசாங்கம் அளிக்கும் சகல உதவிகளையும் நன்கு பயன்படுத்துவர் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டு உணவில் தன்னிறைவு காண உதவி புரிய வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்" எனவும் நவின்றனர். ——

ஆகவே நாட்டில் மாணவர்களிடையே காணப்படும் வறுமைக்கும் ஒழுக்கக் குறைவுக்கும் முக்கிய காரணம் சோம்பலே

மாணவர்களுடைய ஒழுக்கம் திருந்துவதற்கு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் ஆன்மீகத் தொடர்பு அதிகரித்தல் வேண்டும். ஓர் ஆசிரியன் ஒரு மாணவனைச் சந்தித்து அவனுடன் உரையாடி அவனுடைய மனக் கவலைகளையும் குறைகளையும் அறிதல் வேண்டும். அவற்றை அகற்றுவதற்குத் தேவையான சாதனைகளை மாணவன் பயிலுதற்கு பழக்குதல் வேண்டும் மன ஆறுதலை உண்டாக்கக் கூடிய புத்திமதிகளைக் கூறுதல் வேண்டும். இக்காலக் கல்வி முறையில் ஓர் ஆசிரியனுக்கும் ஒரு மாணவனுக்கும் இடையில் இவ்விதமான ஆன்மீகத் தொடர்பு வைத்துக்கொள்ளுதல் மிகவும் கஷ்டம். ஓர் ஆசிரியர் சில சமயங்களில் ஒரு வகுப்பில் 75 மாணவர்களுக்கு பாடஞ் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். சில சமயங்களில் ஓர் ஆசிரியர் இரு வகுப்புகளைக் கற்பித்தல்வேண்டும். சர்வகலாசாலையில் ஒரு பேராசிரியர் இருநூற்றுக்கு அதிகமான தொகையுள்ள மாணவர்களுக்குப் பிரசங்கஞ் செய்தல் வேண்டும். இவ்வாறான கல்விமுறை ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையில் ஆன்மீகத் தொடர்பை எவ்விதம் உண்டு பண்ணும்? ஆன்மீகத் தொடர்பு ஏற்படக்கூடியவகையில் நாட்டில் கல்வி முறை சீர்திருத்தமடைதல் வேண்டும்.

## அணிந்துரை அரங்கம்

மாவிட்டபுரம்
ஸ்ரீ தண்டபாணிக் கந்தன்
திருப்பதிகமும்
தோத்திரப்பஜனைப்பாடல்களும்

ஆக்கியோன் :
அருட்கவி சீ. விநாசித்தம்பி.
("அளவையூர்—சஞ்சீவி")

அச்சிடுவித்தவர் :
தண்டபாணி சங்காபிஷேக உபயகாரர்.

"அளவையூர் — சஞ்சீவி" என்றழைக்கப்படும் ஆசிரியர் திரு. சீ விநாசித்தம்பி அவர்களை சைவ உலகம் நன்கு அறியும். இவர் தெய்வ உபாசனை புரிந்து வருகின்றமையினால் இவருடைய சொற்களிலும் செயல்களிலும் பிறர் அதிசயிக்கத் தக்க திறமைகள் காணப்படுகின்றன. இவர் கதாப்பிரசங்கம் புரிதற்கு ஒரு ஆலயத்துக்குச் சென்றால் அவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியைத் துதித்து தாமாக இயற்றி ஒரு செய்யுளைப் பாடுவார். செய்யுள் சொற்சுவை பொருட்சுவை பக்திச்சுவை அமைந்துள்ளதாயிருக்கும்.

> ஊரிலான் குணங் குறியிலான்
> செயலிலா னுரைக்கும்
> பேரிலானொரு முன்னிலான்
> பின்னிலான் பிறிதோர்
> சாரிலான் வரல் போக்கிலான்
> மேலிலான் றனக்கு
> நேரிலா னுயிர்க் கடவுளா
> யென்னுளே நின்றான்

முருகப்பெருமானும் சிவபெருமானும் பேதமற்றவர்கள். சிவபெருமானே உமாதேவியாருக்கு அவ்வுண்மையை விளக்குகின்றனர். "நமது சத்தியாகிய அறுமுகனுக்கும் நமக்கும் பேதமில்லை. நம்போல் பஞ்சகிருத்தியம் புரிய வல்லவன். வழிபடுவோருக்கு அருளும் வீடுமளிக்க வல்லவன் விபுத்துவப் பொருளாயுள்ளவன். ஆன்மாக்களினது இருதய புண்டரீகத்தக ராலயத்தின்கண் சிதாகாசப் பொருளாயிருக்கின்றான். நீருக்குக்குளிர்ச்சியும் நெருப்புக்குச் சூடும் போலக் குண குணியாக நிற்றலின் எம்மோடு பிரிவின்றி மரத்திற்கு வைரம்போன்றுள்ளவன்". இவ்வாறாகிய பெருமைகளையுடைய முருகப்பெருமான் நம்மனோர்கள் வழிபட்டு ஈடேறும் பொருட்டு மாவிட்டபுரத்தில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கின்றனர். அப் பெருமான் மீது அருட்கவி அவர்கள் "ஸ்ரீ மாவிட்டபுரம் தண்டபாணிக்கந்தன் திருப்பதிகமும் தோத்திரப் பஜனைப் பாடல்களும்" என்ற தோத்திர நூலை ஆக்கியுள்ளனர்.

மாவையூர் தண்டபாணி திருவிருத்தம் ஸ்ரீ மாவைக் கந்தன் தோத்திரம் உபாசனைப் பாடல் பஜனைப் பாடல் என்ற பிரிவுகளாக அமைந்துள்ளன.

பக்திச்சுவை ததும்பும் பாடல் அடியார்கள் பாராயணஞ் செய்து நற்கதியடையத் தக்கவை. பாடல்களை ஓதுபவர்கள் உள்ளங்களில் முருகப்பெருமானின் பக்தி வளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1253 / A

த. முருகேசு கைம்பெண் உலக நாயகி மானிப்பாய் —வழக்காளி

எதிராக

நவாலி வாசியாகிய காலஞ்சென்ற தம்பையா சித்தரின் தத்துவகாரியாகிய த சித்தர் கைம்பெண் மரகதம் நவாலி —எதராளி

யாழ்ப்பாணம் நிக்குலோஸ்சது கோட்டின் 125 /A இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணி, 1967-ம் ஆு ஆவணி மீ 26-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 286-சதம் 40-ம் 22-7-57 தொடக்கம் முழுகதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 28-ம் சதம் 25

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "கொட்டம்பிலானை" கிலப்பரப்பு 1, 1/4 பயிர்களும் குடிசைகளும்.

எல்லைகள்:—கிழக்குப் தெற்குப் சண்முகம் மனைவி சின்னம்மாவின் ஆதனம்.

வடக்கு:—பழைய ரோட்

மேற்கு—முருகன் மனைவி கதிராசியின் ஆதனம்

2. ஷை நவாலி இறை "கொட்டப்பிலாவையும் கலாவையும்" கிலப்பரப்பு 5-ம குளி 4, 1,4ம் இதில் கிழக்குப் பக்கமாய் பிரிக்கப்பட்டுள்ள துண்டு கிலப்பரப்பு 1-ம்குளி 4, 1/4-ம மேல் குறிக்கப்பட்டதும் கழக்குப் பக்கமாகட் பிரிக்கப்பட்டதுமான காணித் துண்டின் எல்லை:—

கிழக்கு கிளை ஒழுங்கை

வடக்கும் தெற்கும்:—முருகல் மனைவி கதிராசியின் ஆதனம்.

மேற்கு கணவதி சின்னத்தம்பி மனைவி செல்லத்தின் ஆதனம்.

னை றம்பவர்களும் இதடங்களுப் உரியதும் உடையதும்.

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனர் விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம டிஸ்றிக்கோட்
107, பெரிய தெரு
யாழ்ப்பாணம், 23-6-1967,
எம். 157, 28-7-67,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

K. கனகசபாபதி திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம் —வழக்காளி

இல. M B 7180

எதிராக

1. நாகலிங்கம் நவரெத்தினமும் பெண் 2 ந. தேஸ்வரியும் சுதுமலை
1. E. விஸ்வநாதன் கைம்பெண் சின்னத்தங்கச்சி சுதுமலை (பின்னால் வெளிப்படுத்தப்பட்ட பகுதி) —எதராளி

யாழ்ப்பாணம் டிஸ்தறிக் கோட்டின் M B, 7180-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1967-ம் ஆு புரட்டாதி மீ 2-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 8750-ம் 13-1-55 தொடக்கம் 2-12-65 வரைக்கும் ரூபாய் 5000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியுங்கோட்டுச்செலவு ரூபாய் 12ம்

ஆதன விபரம்

இலங்கை, வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "கன்திறன் தாழ்வு" கிலப்பரப்பு 5-ம் 16¾ குளியும் கல்வீடும் குளியும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசு சிவஞானத்தின

---

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்த ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்னுடைய அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிறாப்பர்.

Std 1

"அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த இன்பப் பெருக்கே இறையே பராபரமே".

## கோட்டு விற்பனவு விளம்பரம

மணடைதீவு எண் கந்தையா தர்மலிங்க —வழக்காளி

இல. M B. 7462 எதிராக

தீவுப்பகுதி அல்லைப்பிட்டி வயித்திலிங்கம் சிதம்பு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7462-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1967-ம் ஆு செப்டம்பர் (புரட்டாதி) மீ 20-ந் உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 2855-ம் இதில் ரூபாய் 2330/-க்கு 9-6-65- திகதி தொடக்கம் 22-3-66 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீதவட்டியும பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும, கோட்டுச்செலவு ரூபாய் 268 16 சதம இதில தீர்வையில ரூபா 1800/-ம கோட்டுச் செலவில் ரூபா 200/ இறுபட்டது.

காணிகளின் விபரம

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டியிறை "வலவைத் தோட்டம்" கிலப்பரப்பு 6-ம் குளி ½ கிணறும் பயிர்களும எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு மண்ரோட்டு மேற்கு செல்லத்துரை தவநாயகத்தின் ஆதனம் தெற்கு இரத்தின சபாபதி பெண் சிவயோகலட்சுமியின் ஆதனம் இதில் சொரியலாய் அரைவாசி (½)

2. ஷை அல்லைப்பிட்டியிறை "வலவைத்தோட்டத்திற்கு மேற்கு" கிலப்பரப்பு 6-ம கிணறும் மற்றும பயிர்களும் எல்லை கிழக்கு செல்லத்துரை தவநாயகத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் மண்ரோட்டு தெற்கு வயித்திலிங்கம் சரவணமுத்துவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம் இதில் சொரியலாய் 191/432 பங்கு.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer.

தெல்லிப்பழை. 19-7-1967.
M. 1 0 28-7-7

## திருமுறைப் போட்டி.

கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையினர் எதிர்வரும 12—8—67 சுந்தரமூர்த்தி சுவாமிகள குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடாத்த விருக்கும் ஏழாந்திருமுறை (சுந்தரர் தேவாரம்) ப் போட்டியில் பங்குபற்றுமுகமாகப் பலர் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்ப இறுதித் தினம் 31-7-67 ஆகும், போட்டியில் வெற்றி பெறுவோருக்குத் தங்கப்பதக்கமும் மற்றும் பெறுமதியுடைய பரிசில்கள் பலவும வழங்கப்படும்.

இவ்வித போட்டிகளை நடாத்துவதால் நாட்டில் சமயப் பற்றும் கடவுள் நம்பிக்கையும் மேன்மேலும் விருத்தியுறும்என்பதில் ஐயமில்லை

## நாவலர் நல்வாக்கு

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

## வருடாந்த உற்சவம்

யாழ் வண்ணை வைத்தீசுவரன் கோவில் தையல்நாயகி அம்மாளின் வருடாந்த அலங்காரஉற்சவம் 30-7-67 ஞாயிற்றுக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகும். 7-8 67ல் தேர்த்திருவிழாவும் 8-8 67 ல் தீர்த்த விழாவும் இடம் பெறும.

## புங்குடுதீவில் கயரோக விடுதி

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை புதிய கயரோக விடுதி ஒன்றினை அமைப்பதற்கு வைத்திய அதிகாரி உயர்திரு பாலா இராசரத்தினம் அவர்கள் அத்திவாரக்கல் நாட்டினார்கள் மலாயா புங்குடுதீவுஐக்கியசங்கப் பிரதிநிதி திரு வீ சுப்பிரமணியம ரூபா 5200/-ம் திருமதி அன்னரத்தினம் வைத்தியலிங்கம ரூபா 2000/-ம அன்பளிப்புச் செய்தனர்.

ஆதனம் வடக்கு முருகேசு சிவஞானத்தினதும் வேலுப்பிள்ளை கார்த்திகேசுவினது மாதனம் மேற்கு வேலுப்பிள்ளை கார்த்திகேசுவினதும் சின்னத்தம்பி சுந்தரத்தினதுமாதனம் தெற்கு ஒழுங்கை

இ. சு. தர்மரத்தினம்
பெருங்காடு கொமிசனரும்
புங்குடுதீவு விலைமதிப்பாளரும்
எம். 147 28-7-67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

கச்சாய் சங்கரப்பிள்ளை நல்லதம்பி —வழக்காளி

இல. 3243 எதிராக

1. சாவகச்சேரி தற்காலம் ஆலங்கேணி தம்பு சபாபதி கைம்பெண் பரமேஸ்வரி

பராயமற்றவர் 2. ஷை. சபாபதி கனகசபாபதி
,, 3. ஷை. சபாபதி மகள் லோகேஸ்வரி
,, 4. ஷை. சபாபதி மகள் சுருஷ்ணபூபதி
,, 5. ஷை. சபாபதி சதானந்தன
,, 6. ஷை. சபாபதி கண்ணபிரான்
,, 7. ஷை. சபாபதி தாண்தோன்றீஸ்வரன்
,, 8. ஷை. சபாபதி முருகதாஸ்
,, 9. ஷை. சபாபதி மகள் சந்திரமதி

1-ம் எதிரி மேற்காட்டிய பராயமற்ற பிள்ளைகளின் பராமரிப்புக் காரியாகவும் காலஞ்சென்ற தம்பு சபாபதியின் ஆஸ்திகளின் பரதிஸ்டாகவும் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 3243-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1967-ம் ஆு புரட்டாதி மீ 13-ந் உ புதன் கிழமை காலை 10 மணிக்கு அக் காணிக்குள் நின்று ஏன்றுத் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத் தொகை:—ரூபா 1614-ம் 10-7-66 தொடக்கம் 7-10-66 வரையும் ரூபா 1200-க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டி வரும்தொகைக்கு இறுக்கும்வரையும் 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 326/25 சதம

ஆதன விடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று அல்லாரையிறை "பன்றிக்கேணி கருப்பன் வளவு" நிபர 24 குளி 8,22/32 இது எஸ். சுப்பிரமணியம உத்தரவுபெற்றஉலாந்தாவால் 959-மஇலக்கப் படத்தில் விஸ்தரிக்கப்பட்ட 3-மதுண்டாகிய கிழக்குழுங்கை வடக்கு தம்பு சபாபதிக்குரியவாதனம் மேற்கு கந்தன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்கும் உரியவாதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளனைத்தும. F. 342/124 பதிவு.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி, 26-7-1967.

செல்லையா குமாரசிவம்,
கொமமிஷனர்.

எம் 147 28-7-7

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காலஞ்சென்ற யோக்கிம்பிள்ளை சைமன் யோசேப் 6 கதீட்றல் வீதி யாழ்ப்பாணம் அவர்களின் தத்துவ வழக்கு—1242/T

யோக்கிம்பிள்ளை சைமன் யோசேப் கைம்பெண் கிறேஸ் லூசியா 6 கதீட்றல் வீதி யாழ்ப்பாணம —தத்துவகாரி

எதிராக

1. யோகேர்பிள்ளை அருள் நாயகம் டோமினிக்
2. யோசேப் லூக்காஸ் அன்றனும்
3. பெண் இறஸ்ரபெல் பகமினி யோசேப்
4. இசபெல் ராஜினி யோசேப்
5. மேரி மகடலீன தஞ்ஜினா யோசேப்
6. இலறபெல் ரூகினா யோசேப்
7. கிறிஸ்ரோப்பர் இராஜசிங்கம யோசேப்
8. பேர்ணடேற அஞ்ஜனீன் யோசேப் —பிரதிகாரர்

யாழ்ப்பாணம் டிஸ்திறக்கோட்டி 1242 தத்துவ வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1967-ம் ஆு புரட்டாதி மீ 10-ந் உ ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்தவலத்தில் விற்கப்படும.

ஆதன விபரம

1. வடமாகாணம யாழ்ப்பாணம டிஸ்திறி யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை "நெடுங்குளம் வயல்" கிலபரப்பு 25-ம அதற்குச் சேர்ந்தவைகளும எல்லை கிழக்கு பாலைதீவுப்பாவிக்கும்வரம்பு வடக்கு றெயில்ரோட் மேற்கு கேணி தெற்கு E. R. T. சந்திருகுலசிங்கியினுதனம இதில் அரைவாசி.

2 ஷை. கொழும்புத்துறை இறை "நெடுங்குளம புலம்" கில பர 9 குளி 9, 9/10-ம தென்னைகளும் தென்னைகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு பொன்னம்பலம மேற்கு வடக்கு ஒழுங்கை மேற்கு விசுவநாதர் கணபதிப்பிள்ளையும் அவரின் உரிமையாளரின் ஆதனமுனம கதிரவேலும்.மற்றவர்களும் தெற்கு றெயில் ரோட் இதல் அரைவாசி.

3. ஷை. கொழும்புத்துறை இறை "நெடுங்குளம் வயல்" கெற் பர 9 குளி 6, 6/10 எல்லை கிழக்கு பாதை வடக்கு E. R. T. சந்திருகுலசிங்கியினுதனம் மேற்கு கோயில் ஆதனம் தெற்கு E. R. T. சந்திருகுலசிங்கியினுதனம் இதல் அரைவாசி.

அ. பேபா. எதிர்மனசிங்கம்
கொமமிஷனர் & விலைமதிப்பாளர்

14, டேவிற்ரோட்,
யாழ்ப்பாணம. 16-7-67.

M 156 28-7-67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

முருகேசு துரைசிங்கம் சங்கானை மேற்கு —வழக்காளி

இல. M B 8604

எதிராக

1. வயித்திலிங்கம் சின்னத்துரை கந்தரோடை—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B- 8604-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1967-ம் ஆு புரட்டாதி மாதம் 6 ந் உ புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1108-ம் 16-11-66 தொடக்கம் 19-5-67 வரை ரூபா 1000-க்கு 10 வீதவட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் முத்திரைச் செலவு ரூபாய் 30-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை "சங்காவத்தை" கி பர 1 ஒன்றும் 15½ பதினைந்தேகால் குளியும் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் தென்மேற்குப் பக்கமாய் இக் காணிக்குரிய கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவப்புரித்தும் எல்லை கிழக்கும் தெற்கும் சின்னக்குட்டி நல்லதம்பிக்கும் பங்காளிகளுக்குரிய வாதனங்கள் வடக்கு கிராமச்சங்க ஒழுங்கை மேற்கு கை ஒழுங்கைஇவை அடங்கலும்.

அ. யு. எட்வேட்
கொமிசனர் விலைமதிப்பாளர்

நாவந்துறை தெற்கு
ஊர்காவற்றுறை 10-7-67
எம். 155, 28-7-67

பெற்குர் ஆசிரியர் சங்கம்……

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

பிரம்மஸ்ரீ சி. ஸ்ரீனிவாசன் தலைவராகவும் செயலாளராக ம. க நடராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்

உபதலைவர் செயலாளர் முதலியோருடன் 10 பேர் கொண்ட நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

கல்லூரி வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

——

## COMMISSION SALE
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல. M B. 8425

அல்வாய் தெற்கு S. சுப்பிரமணியம் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை தன் வகைக்காகவும் காலஞ்சென்ற S. சுப்பிரமணியத்தின் ஆதனங்களுக்கும் பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு 706-ம் இலக்கத்தத்துவ வழக்கில் தத்துவகாரி என்ற வகையிலும் —வழக்காளி

எதிராக

1. அல்வாய் வடக்கு நாகன் சீனித்தம்பி
2. பெண் சிதம்பரம்
3. ஷை யூர் நாகன் பொன்னன்

—எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1967-ம் ஆ. ஆவணி மீ 19-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று

1. அல்வாய் மழவராய குறிச்சி இல் உற குறும்பிலாவத்தை நிலப்பரப்பு 6½ இனறு பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஏதம்பரப்பிள்ளை பரமுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு சின்னையா வெற்றிவேலுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் மேற்கு பொன்னம்பலம் சீனிவாசகத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு முருகன் இளையவனுக்கும்மறுபேருக்குமுடைய வாதனம்இதடங்கலிற் சொரிபலா 23/48 பங்கும் தெற்குப் புறமாக புதிதாகக் கட்டப்பட்ட மூன்று கல்வீடுகளும் கொட்டில்களும் சிந்தமாகவும்,

2. அல்வாய் விரக்கொடிய" குறிச்சியிறை "முடவானை நிலப்பரப்பு 30, 5/8 இதிலாட்சிப்படி நிலப்பரப்பு 27 குளி ¼ பனைகள் வடலிகள் வீடு கொட்டில்களும் எல்லை கிழக்கு புதயான் தம்பனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு சின்னையா முருகுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம் மேற்கு பெரியதம்பி முருகுப்பிள்ளைக்கும் மறுபேருக்கு முடைய வாதனம் தெற்கு நல்லதம்பி கந்தையாவுக்கும் மறுபேருக்கு முடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் நிலத்தில்சொரியலாய் 1/8 பங்கும் 12 பெண்பனைகளும் 16 ஆண் பனைகளும் 12 வடலிகளும் சிந்தமாகவும் ஆனால் இவ்வெல்லைக் குட்பட்ட வீடு கொட்டில்கள் பிறநீங்கலாகவும்.

| | |
|---|---|
| தரட்சித் தொகை:— | 1541-00 |
| இதில் ரூபா 10000-க்கு 1-12-64 தொடக்கம் 4-5-65 வரை 8 வீத வட்டி ரூபா | 33-35 |
| அதன்பின் முழுத் தொகைக்கும் 4-5-65 தொடக்கம் 29-5-67 வரை 5 வீத வட்டி ரூபா | 162-90 |
| மொத்தம் ரூபா | 1737-25 |
| செலவு ரூபா | 281-60½ |
| இதில் தீர்வைத் தொகையில் கொடுபட்ட ரூபா | 1188-62 |
| கோட்டுச்செலவில் கொடுபட்ட ரூபா | 135-60 |

V. M கந்தசாமி
Commissioner & Valuer.

வல்வெட்டித்துறை
18-5-67. (எம். 155 28-7-67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை கிழக்கு ஆறுமுகம் தலரெத்தினம் —வழக்காளி.

இல. M B. 7047 எதிராக

பத்தைமேனி தற்பொழுது அப்கொட் றோட்டு

(1) பொன்னுத்துரை சின்னத்தம்பி (2) பெண் சிவபாக்கியம் பத்தைமேனி (3) நடராசா கந்தசாமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 7047-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக்காணிகள் 1967-ம் ஆண்டு ஆவணி மீ 16-ஆம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும் 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் 11-00 மணிக்கு மூன்றாம் காணியும் முற்பகல் 11-30 மணிக்கு நாலாம் காணியும் பிற்பகல் 4-00 மணிக்கு ஐந்தாம் காணியும் 4-30 மணிக்கு ஆறும் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 8422-21-ம் 13-11-64 தொடக்கம் 7-12-65 வரைக்கும் ரூபா 5000-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 345-43.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு அச்சுவேலி கோயிற்பற்று பத்தைமேனியிறை "கப்புறமடை" பர. நில. இலா 24-0 குளி இதற்கெல்லை கிழக்கு யாழ்ப்பாணம் பிண்பாண்டாவரினுதனம. வடக்கு றோட்டு மேற்கு பேதுருபிள்ளைக்குரிய வாதனம். தெற்கு முடிக்குரிய வாதனம், இதடங்கலும் பதிவு இலக்கம் K 146/173

(2) ஷை 'மபனை' பர நில இலா 4-0 இதற்கெல்லை கிழக்கு சுடுகாடு வடக்கு வெற்றிமடப்பிள்ளையாருக்குரியவாதனம். மேற்கு குஞ்சைப்பிள்ளை பெண் றேசம்மாவினுதனம். தற்கு றோட்டு. இதடங்கலும் பதிவு இலக்கம் K 146/174

(3) ஷை 'மீசைஓடை தோட்டம் பர நில இலா 18, 7/8-0 குளி இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை இரெத்தினத்தினுதனம். வடக்கு பொன்னம்பலம் சரவணமுத்துவினுதனம். மேற்கு சின்னத்தம்பி பெண் சிவபாக்கியத்தனுதனம். தெற்கு முருகேசு நல்லதம்பினுரிமையாளரினுதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத 1/9 பங்கு. பதிவு இலக்கம் K 170/89.

(4) ஷை 'முத்தை குறிவயல்' பர நில இலா 42¼-0 குளி இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னையாவினுதனம். வடக்கு உபயோகமற்ற காணி மேற்கு வல்லிபுரம் ஐயாத்துரைக்கும் சகோதரங்களுக்கும் ஆறுமுகம் பெண் பொன்னம்மாவுக்குமுரியவாதனம். தெற்கு குளமும் சின்னத்தம்பி பெண் சிவபாக்கியத்துக்குமுரியவாதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத 1/9 பங்கு. பதிவு இலக்கம் K 170/91.

(5) ஷை கதிரிப்பாய் 'குமவிளான்' பர நில இலா 80-0 குளி இதற்கெல்லை கிழக்கு காசிப்பிள்ளை இரத்தினசாமிக்கும் முத்தர் சின்னப்புவுக்குமுரியவாதனம். வடக்கு கனுத்தார் ஆண்வாருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். மேற்கு பொன்னம்பலம் சரவணமுத்துவிற்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு பத்தைமேனி கிராமஎல்லை. இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு, பதிவு இலக்கம் K 195/105.

(6) ஷை கதிரிப்பாய் 'இரக்கிரி' பர நில இலா 48-0 குளி கிழக்கும் மேற்கும் முருகர் தம்பிப்பிள்ளையினுரிமையாளரினுதனம். வடக்கு சின்னப்பு நடராசாவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு பத்தைமேனி கிராமஎல்லை. இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு பதிவு இலக்கம் K 195/106

செ. விசாகரத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

133, பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம், 22-7-67.
M 151 28-7-67.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாவாலி பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம் Ltd. நவாலி —வழக்காளி

இல. M B. 7284 எதிராக

சண்முகம் சரவணை, தன்னை, மானிப்பாய் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 7284-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1967-ம் ஆண்டு செப்ரெம்பர் (புரட்டாதி) மாதம் 21-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1947/50 சதமும் 8-3-65 தொடக்கம் 4-11-65 வரைக்கும் ரூபாய் 1500-க்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 277/30 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயில் பற்று மானிப்பாய் இறை "வீரதேவன் சீம" அல்லது "பெரியபுலம் அணைமுந்தசீம முலலை ஒல்லை சோழங்கபத்திராயன சீம இளவசீம சந்தனநாதர் வளவு, அவச்சி வளவு பெரிய தோட்டம் கலட்டி வண்ணான் தோட்டம்" வரகுச்செய்கை நிலப்பரப்பு 4 (Lms- VC) E. 259/143 ன் கீழ் பதிவு பெற்றது) இதில் மேற்குப்பக்கமாகப் பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு (வரகுச் செய்கை) 2 (Lms. VC) ம வீடும் கிணறும் பயிர்களும் மற்றச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு அட்சேந்திரன் பெண் அன்னம்மாவினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு இரத்தினசபாபதி பெண் புஷ்பகாந்தியின் ஆதனம் தெற்கு இளையவன் நன்னியனின் ஆதனம் (328/32 ன் கீழ் பதிவு பெற்றது)

க. சரவணமுத்து
கொம்மிஷனர் & விலை மதிப்பாளர்
எம்( 152, 28-7-67)

173, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
15-7-67.

நல்ல சொற்பொரு ளுணு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானைமு கத்தினை மேவிவாழ்
வல்ல பைக் குரியானை வழுத்துவாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 28—7—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பழை சாமுவேல் சபாபதி வயிரமுத்து கைம்பெண் செல்லம்மா வயிரமுத்து —வழக்காளி

இல. M B. 6002 எதிராக

1. சிதம்பரநாதர் இரத்தினசபாபதி அல்லைப்பிட்டி சிவவாசம்
2. பெண் சிவயோகலட்சுமி
3. சொலமன் வேதநாயகம் வயிரமுத்து தெல்லிப்பழை

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6002-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1967-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மீ 30-ந் உ (30-8-67) புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 6750-ம் இதில் ரூபாய் 5000-க்கு 9-9-63 திகதி தொடக்கம் 20-6-64 திகதி வரைக்கும 100-க்கு 15 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 299-50 சதம்

காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்டைதீவு இறை 'உப்புக்குளி' ஏக்கர் 2-ம் 19,1/2 பேச்சும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு இராமநாதர் பெண் விசாலாட்சியின் ஆதனம் மேற்கு றோட்டு தெற்கு குளம் முற்பதிவு C. 330/36,

2. மேற்படி அல்லைப்பிட்டியிறை "உடையான்புலம்" நிலப்பரப்பு (43-ம்) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு அந்தோனி பேதுருவின் உருமைக்காறருக்கும் செல்லத்தம்பி கந்தசாமிக்கும் சிலேஸ் அந்தோனிக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கு முரிய வாதனங்கள் வடக்கு ஒழுங்கை மேற்கு வயித்திலிங்கம் செல்லத்துரையினுதனம். தெற்கு அந்தோனி பேதுரு சிலேஸ்சின் உரிமைக்காறருக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் இதடங்கலிலும்

முற்பதிவு. C. 354/141.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

தெல்லிப்பழை
23—7—1967.
எம். 159 28-7-67

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில், வழக்கு இல. 8134

வழக்காளி: வல்லிபுரக்குறிச்சி கந்தையா சபாரத்தினத்தின் காணிக்கு தத்துவ வழக்கு இல. 715 டிஸ்திறிக்கோடு பருத்தித்துறையில் சபாரத்தினம் கைம்பெண் நிர்வாகி.

எதிரிகள்:— 1. வயிரவன் இராசையா புலோலி கிழக்கு 2. வயிரவன் தம்பையா புலோலிகிழக்கு 3. வயிரவன் மாணிக்கன் புலோலிகிழக்கு 4. வயிரவன் கைம்பெண் உமையாள் புலோலி கிழக்கு

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1967-ம் ஆண்டு புரட்டாதி மீ 2-ந் திகதி (2-9-67) சனிக்கிழமை முற பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று மனைக்குறிச்சி புலோலி கிழக்கு 'கொத்தியவத்தை' நில பர 9½ ஆனால் அளவையின்படி நில பர 9 குளி 7 1/16 எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் தங்கரத்தினத்திற்கும் மறுவுக்கும் உடைய ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு சேனாதிராசா மார்க்கண்டராசாவுக்கும் மறுவுக்கும் உடைய ஆதனம். தெற்கு வயிரவன் கந்தனுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இதில் சொரியலாய் 67/288 பங்கு. கல் வீடும் முன்னறையும் (கோல்) முழுவதும். கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 13400/-,

2. ஷை சிங்கபாகுதேவன் குறிச்சி 'கொத்தியவத்தை' நில பர 6 ஆனால் ஆட்சியின்படி நில பர 4 குளி 7¾. இதில பிரிவிடலின்படி நில பர 1 குளி 13, 15/16 பிறநீங்கலாய் மிகுதி வடக்கில் நில பர 1 குளி 3¼ கிழக்குப் புறமாய் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு வல்லி இளையவனுக்கும் இராமலிங்கம் பெண் தங்கரத்தினத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு சிதம்பரம் பெண் நாகம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு சின்னன் மாணிக்கனுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட யாவையும் பனை; வடலிகளுடன். கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 1750/—.

3. ஷை வராத்துப்பளை 'கனரியந்திட்டல் வயல்' நில பர 7½ பனைகளுடன் எல்லைகிழக்கும் வடக்கும் வேலாயுதன் நாகமுத்துக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு சுப்பர் பெண மூத்தனுச்சிப்பிள்ளையின் உருமைக்காறருக்கு. தெற்கு சிவகுருநாதர் பெண் சின்னம்மாபிள்ளைக்கும் மறுபேருக்கும உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவையில் சொரியலாய் 1,6 பங்கு. கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 125/—.

4 ஷை கட்டைவேலி கோயிற்பற்று வல்லிபுரக்குறிச்சி 'திலலையடி வயலுக்கு தெற்கு' நில பர 5. இதில் வடக்குப்புறமாக ¼ பங்கு நில பர 1¼ எல்லைகிழக்கு ஆழ்வான் சின்னத்தம்பியின் உருமைக்காரரின் ஆதனம். வடக்கு சரவணமுத்து கைம்பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு சின்னன் முருகன் பெண் இலட்சுமியின் ஆதனம். தெற்கு செல்லையா கனகசபைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட யாவையும் கோட்டால் அனுமதிக்கப்பட் விலை மதிப்பு ரூபா 125/—.

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை:— | ரூபா. | 6625-00 |
| ரூபா 5000-க்கு 10 % 30-3-64—14-6-65 | | 644-75 |
| ரூபா 7289-75 க்கு 5 % 14-6-65 - 20-9-66 | | 454-00 |
| | | 7723-75 |
| கட்டியது | | 3000-00 |
| | | 4723-75 |
| ரூபா 4723-க்கு 5 % 20-9-66—20-5-67 | | 158-00 |
| கட்டவேண்டிய தொகை | | 4881-75 |

கா. முத்துக்குமாருஐயர்.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
Commissioner of Sales & Valuer.

சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 11-6-67.
M 137 28-7-67,